DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -5

| | | |
|---|---|---|
| Name : | திரு. மாணிக்கவாசகம் | Caste: |
| Father's Name: | திரு. நாராயணன். | Calling: |
| Village : | | Religion: |
| Taluk : | | Age: |
| Date : | | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 6th day of June - 2023.
A1 and A3 to A6 present.

**06.06.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மேற்கு வட்டம், முருங்கப்பட்டி கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 02.09.2014 அன்று நான் சேலம் தெற்கு வட்டம், வீரபாண்டி கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் காலை 9.15 மணியளவில் ஆட்டையாம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேய்க்காட்டில் ஒரு பிரேதம் கிடப்பதாகவும், எனவே என்னை அந்த இடத்திற்கு வரும்படியும் சொன்னார்.

நானும் எனது உதவியாளர் கொப்பத்தான் என்பவரும் புறப்பட்டு அந்த இடத்திற்கு சென்றோம். பேக்காட்டில் பழனிச்சாமி என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் பிரேதம் கிடந்தது. பிரேதத்தின் கழுத்து அறுக்கப்பட்டு இருந்தது. வயிற்றில் தொப்புளின் இடது பக்கம் குத்துக்காயம் காணப்பட்டது. அந்த குத்துக்காயத்தில் இருந்து குடல் சிறிது வெளிவந்திருந்தது. ஆய்வாளர் பார்வை மகஜர் தயார் செய்தார். அந்த

பார்வைமகஜரில் நானும் எனது உதவியாளரும் கையெப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 அதில் நான் முதல் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன்.

அன்று காலை 10.30 மணிக்கு ஆய்வாளர் அந்த இடத்திலிருந்து ரத்தம் படிந்த மண் மற்றும் ரத்தம்படியாத மண் ஆகியவற்றை எடுத்தார். அதற்காக கைப்பற்றுதல் மகஜர் தயாரித்தார். அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.3. அந்த மகஜரில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன். ரத்தம் படிந்த மண் அ.சா.பொ.1. ரத்தம் படியாத மண் அ.சா.பொ.2.

பழனிச்சாமி தோட்டத்திற்கு பக்கத்தில் ஒட்டமரக்காட்டிலிருந்து அரியானூர் செல்லும் சாலையில் TVS XL Super பச்சை நிற வாகனமானது நின்று கொண்டிருந்தது. அதன் பதிவெண் TN 29AW5722. அதனையும் ஆய்வாளர் கைப்பற்றினார். அதற்காக கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அப்போது மணி 10.40 அந்த மகஜரில் நான் முதல் சாட்சியாக கையொப்பம் செய்தேன். 2 வது சாட்சியாக எனது உதவியாளர் கையொப்பம் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4. அந்த வாகனத்தை காட்டக்கூடிய 4 எண்ணிக்கை மற்றும் சி.டி அ.சா.பொ.3 வரிசை. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**அனைத்து எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை**

02.09.2014 அன்று நான் எத்தனை மணிக்கு அலுவலகம் சென்றேன் என்றால் நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டு அதற்கு பிறகு தான் எனது அலுவலகம் சென்றேன். அ.ந்த சமயத்தில் சேலம் ஜங்ஜனில் குடியிருந்தேன். நான் குடியிருந்த இடத்திற்கும் எனது அலுவலகத்திற்கும் இடையே சுமார் 15 கி.மீ தொலைவு இருக்கும். எனது அலுவலகத்திற்கும் பிரேதம் கிடந்த இடத்திற்கும் சுமார். 1–1/2 கீ.மீ தொலைவு இருக்கும். நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்றபோது போலிசார் அங்கு இருந்தார்கள்.

பிரேதம் கிடந்த இடமானது எனது எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். பிரேதத்தின் தலையானது மேற்கு பக்கமாக கிடந்தது. போலிசார் என்னை பிரேதம் கிடந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் அலுவலகத்திற்கு சென்று

கொண்டிருந்தபோது தான் ஆய்வாளர் எனக்கு போன் செய்தார். அந்த சங்கதியையும் நான் நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்று அங்கு அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்ததிற்கு பிறகு தான் அலுவலகம் சென்றேன் என்றும், ஆய்வாளரின் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். ஆய்வாளர் எனக்கு போன் செய்த போது காலை 9.15 மணி. அந்த நேரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

TVS XL வாகனமானது ஆய்வளரால் கைப்பற்றப்பட்டதாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்ற போது அங்கு பொதுமக்கள் 5, 6 பேர் இருந்தார்கள். தார் ரோட்டிற்கு கிழக்கே தண்ணீர் போகும் ஓடை இருக்கிறது. அந்த ஓடையில் எப்போதும் தண்ணீர் இருக்கும் என்றால் சரிதான். மகஜர்களை ஆய்வாளர் தான் எழுதினார். நான் சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றாலும், நான் சொன்னது போல் சம்பவ இடத்தில் வைத்து எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றாலும், நான் காவல்நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்து விட்டு நான் ஒரு அரசு அலுவலர் என்பதால் போலிசார் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.